ஆர்எஸ்எஸ் சித்தாந்தமும் நேதாஜியின் கொள்கையும் இரு துருவங்கள்

மகள் அனிதா போஸ்

கொல்கத்தா, ஜன. 21: ஆர்எஸ்எஸ்ஸின் சித்தாந்தமும் நேதாஜி சுபாஷ்சந்திர போஸின் கொள்கையும் இரு துருவங்கள் மட்டுமின்றி ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போகாதவை என்று நேதாஜியின் மகள் அனிதா போஸ் தெரிவித்தார்.

கொல்கத்தாவில் நேதாஜி சுபாஷ்சந்திர போஸின் பிறந்த நாளை ஜன. 23- ஆம் தேதி அன்று கோலாகலமாகக் கொண்டாட ஆர்எஸ்எஸ் திட்டமிட்டுள்ளது. ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத் கொல்கத்தாவின் ஷாஹீத் மினார் மைதானத்தில் அன்றைய தினம் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசவுள்ள நிலையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தற்போது ஜெர்மனியில் வசிக்கும் அனிதா போஸ் இதுதொடர்பாக தொலைபேசி மூலம் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை கூறியதாவது:

நாட்டில் பிற கட்சிகளைவிட நேதாஜியின் சிந்தனையுடன் காங்கிரஸின் கொள்கைகள் அதிகம் ஒத்துப்போகின்றன. நேதாஜியால் மதச்சார்பின்மை போதிக்கப்பட்டது; ஆனால் பாஜகவுக்கும் ஆர்எஸ்எஸ்-சுக்கும் அனைத்து மதங்களையும் மதிக்கும் மனோபாவம் கிடையாது. நேதாஜி ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர் என்றாலும் அவர் அனைத்து மதங்களின் நம்பிக்கைகளையும் மதித்தார். அனைத்து சமூகத்தினரிடமும் ஒத்துழைப்பு நிலவுவது அவரின் நோக்கமாக இருந்தது.

அவரின் இந்த விருப்பங்களை பாஜகவும் ஆர்எஸ்எஸ்ஸும் பிரதிபலிக்காது. பாஜகவும் ஆர்எஸ்எஸ்ஸும் வலதுசாரி என்றால் நேதாஜி இடதுசாரி எனக் கருதலாம்.

நான் கேள்விப்பட்ட வரையில் ஆர் எஸ் எஸ் - நேதாஜிக்கு இடையிலான சித்தாந்தங்கள் வெவ்வேறு துருவங்கள் மட்டுமின்றி, ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போகாதவை.

நேதாஜியின் சிந்தனைகளை ஏற்க ஆர்எஸ்எஸ் நினைத்தால் அது நிச்சயம் நன்றாக இருக்கும். நேதாஜியின் பிறந்த நாளை பல்வேறு அமைப்புகள் பலவாறு கொண்டாட விரும்புகின்றன. ஆனால் அவற்றில் சில அவரின் சிந்தனையுடன் உடன்படுகின்றன.

நேதாஜியின் பிறந்த நாளைக் கொண்டாட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரும் பாஜக தலைமையிலான மத்திய அரசுக்கு இந்நேரத்தில் பாராட்டுத் தெரிவிக்கிறேன். இந்த விஷயத்தில் இரு கண்ணோட்டங்கள் உள்ளன.

ஒன்று, இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு அதிகாரபூர்வ காங்கிரஸின் நிலைப்பாடு வேறுவிதமாக இருந்தது. மற்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் இடையே நேதாஜி பற்றிய தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படவில்லை. நாட்டின் விடுதலைக்கு ஒத்துழையாமை இயக்கமே வழிவகுத்தது என்பதை மட்டுமே அவர்கள் கூறிவந்தனர். ஆனால் நேதாஜி பற்றிய ரகசிய ஆவணங்கள் வெளியிடப்பட்ட பிறகு இந்திய தேசிய ராணுவம் நாட்டின் விடுதலைக்கு முக்கியப் பங்காற்றியது தெரியவந்தது.

மற்றொன்று, தற்போது ஆளும் பாஜக அரசின் கருத்துக்கு மாறுபட்ட சிந்தனை கொண்ட நேதாஜியின் பிறந்த நாளைக் கொண்டாட பாஜக அரசு எடுத்துவரும் முயற்சிகள் ஆச்சரியமளிப்பவையாக உள்ளன. ஒருவேளை அவர் உயிருடன் வாழ்ந்து ஆளும் பாஜக அரசின் சிந்தனைக்கு முரணாக இருந்தால் அவரை பாஜக கௌரவித்திருக்காது. எனவே இக்கொண்டாட்டம் அவர்களின் நலனுக்காக நடத்தப்படக்கூடும் என்றார்.

மேற்கு வங்க அரசு 2015-இல் மாநில உள்துறை வசம் இருந்த நேதாஜி தொடர்பான 65 ரகசியக் கோப்புகளை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது. அடுத்த ஆண்டே பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு நேதாஜி தொடர்பான 100 ரகசியக் கோப்புகளை வெளியிட்டது. நேதாஜியின் மறைவு பற்றிய சர்ச்சைக்கு தீர்வு காண நாடு விடுதலை பெற்றதும் மத்திய அரசு சார்பில் மூன்று விசாரணை ஆணையங்கள் அமைக்கப்பட்டன. அவற்றில் காங்கிரஸால் அமைக்கப்பட்ட ஷா நவாஸ் ஆணையமும் கோஸ்லா ஆணையமும் 'தைவான் நாட்டில் தைஹோகு விமான நிலையத்தில் இருந்து 1945 ஆக. 18-ஆம் தேதி புறப்பட்ட விமானத்தில் பயணித்த நேதாஜி விபத்தில் இறந்துவிட்டார்' என்றன.

பாஜக அரசால் அமைக்கப்பட்ட மூன்றாவது ஆணையமான முகர்ஜி ஆணையம் நேதாஜி அந்த விமானத்தில் பயணிக்கவில்லை எனக் கூறியுள்ளது.

யூனியன் பேங்க் ஆப் இந்தியா
Union Bank of India
இந்திய அரசு உடைமையாக்கப்பட்டது A Government of India Undertaking
आन्ध्रा Andhra | कार्पोरेशन Corporation

பிராந்திய அலுவலகம் : 1087D, கிருஷ்ணா டவர்ஸ், 3வது தளம், லட்சுமி மில்ஸ் ஜங்ஷன், அவினாசி ரோடு,
கோயமுத்தூர்–641037, போன் : 0422–2240306. இ–மெயில் : cm-cmrd-rocbe@unionbankofindia.com

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை -IX

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான 30 நாள் மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான/அடமானப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, யூனியன் பேங்க் ஆப் இந்தியாவின் (பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்), அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்து கொள்ளப்பட்டது (கீழ் குறிப்பிட்டுள்ள விபரப்படி), கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைகளுக்காக 'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே' மற்றும் 'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி' என்கிற நிலையில் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி அன்று விற்பனை செய்யப்படுகிறது.
சொத்திற்கான குறைந்தபட்ச விலை மற்றும் முன்வைப்புத் தொகை விபரம் கீழே பட்டியலில் தரப்பட்டுள்ள விபரப்படியாகும்.

1. கிளை : சிங்காநல்லூர். M/s.அண்ணாமலையார் டிரேடர்ஸ் (உரிமையாளர் : திரு. சுந்தர்ராஜ்.V), கதவு எண்.72, K P R லேஅவுட், 3வது வீதி, சிங்காநல்லூர், கோயமுத்தூர் தெற்கு, கோயமுத்தூர் – 641 005; **திரு. சுந்தர்ராஜ் V,** த/பெ. வரதப்பன் R, SF எண்.327, 328/1, கதவு எண்.72, K P R லேஅவுட், 3வது வீதி, சிங்காநல்லூர், கோயமுத்தூர் – 641 005; **திரு. R.வரதப்பன்,** த/பெ. ராமசாமி, கதவு எண்.206/72, K P R லேஅவுட், சிங்காநல்லூர், கோயமுத்தூர் தெற்கு, கோயமுத்தூர் – 641 005. நிலுவைத் தொகை : **ரூ.10,17,177.95 (ரூபாய் பத்து லட்சத்து பதினேழாயிரத்து நூற்று எழுபத்து ஏழு மற்றும் பைசா தொண்ணூற்று ஐந்து மட்டும்)** 31.03.2022 தேதி வரை, மற்றும் வட்டி மற்றும் பிற செலவுகள்.

சொத்து விபரம் : MOD எண்.821/2016 ன்படியான சொத்து விபரம் (திரு. R.வரதப்பன் பெயரிலுள்ள சொத்து) : கோயமுத்தூர் பதிவு மாவட்டம், சிங்காநல்லூர் சார் பதிவு மாவட்டம், கோயமுத்தூர் தாலூகா, சிங்காநல்லூர் கிராமம், சர்வே எண்.327 மற்றும் 328/1, இதிலுள்ள நிலம் குடியிருப்பு மனையிடங்களின் லேஅவுட்டாக அமைக்கப்பட்டதில், அதிலுள்ள மனை எண்.23 ன் கிழபுற பகுதிக்கு எல்லைகள் விபரம் : மனை எண்.30 க்கு வடக்கு, கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, பார்வதிக்குச் சொந்தமான சொத்துக்குக் கிழக்கு, கிருஷ்ணசாமி தேவருக்குச் சொந்தமான சொத்துக்கு மேற்கு. இதன் மத்தியில், அளவுகளாக, கிழமேல் வடபுறம் – 20 அடி, கிழமேல் தென்புறம் – 20 அடி, தென்வடல் மேற்புறம் 69¾ அடி, தென்வடல் கிழபுறம் – 67 அடி, சேர்ந்த மொத்தம் 1367½ சதுரடி அல்லது 3 சென்ட் 59½ சதுரடி குடியிருப்பு நிலம், அங்குள்ள கட்டிடங்களுடன், அங்குள்ள பாத்திய அனுபந்தங்களுடன், வழித்தட உரிமை மற்றும் அங்குள்ள அனைத்துப் பிற உரிமைகளுடன். கதவு எண்.72, KPR லேஅவுட், 3வது வீதி. சொத்து வரி விதிப்பு எண்.13242, மின்சார சர்வீஸ் இணைப்பு எண்.554. இச்சொத்து கோயமுத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. **மேற்படி சொத்து திரு. R.வரதப்பன் பெயரிலானது.**
குறைந்தபட்ச விலை : ரூ.55,18,000/– முன்வைப்புத் தொகை : ரூ.5,52,000/– குறைந்தபட்ச ஏல உயர்வு : ரூ.50,000/–
வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க (ஏதேனுமிருப்பின்) விபரம் : இல்லை. எவ்வாறாயிருப்பினும் ஏலதாரர்கள் தங்களது சொந்த விசாரணையை மேற்கொண்டு பதிவு அலுவலகத்திலிருந்து வில்லங்கச் சான்றுகளைப் பார்வையிட்டுக்கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள்.
கணக்கு எண்.109321980050000, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, யூனியன் பேங்க் ஆப் இந்தியா, சிங்காநல்லூர் கிளை, IFSC கோடு : UBIN0910937
கணக்குப் பெயர் : Inward RTGS
தொடர்பு கொள்ள வேண்டியவரின் பெயர் மற்றும் தொடர்பு எண். : திரு. ரமேஷ்.B, கிளை மேலாளர், தொடர்பு எண்.7708746735, 8344734541.
சுவாதீன வகை : அடையாள சுவாதீனம்.

2. கிளை : சிங்காநல்லூர். கடன்தாரர் : M/s.ஸ்ரீ ஜெய்டெக்ஸ் ஸ்பின்னிங் மில்ஸ், உரிமையாளர் லேட். திரு. பேச்சியண்ணன், பழைய எண்.9/43A, புதிய எண்.9/5, ஒண்டிப்புதூர் ரோடு, NGR புரம், இருகூர் அஞ்சல், கோயமுத்தூர் – 641 103; **உரிமையாளரின் சட்டபூர்வ வாரிசுதாரர் : திருமதி. ஜெயலட்சுமி.P,** பழைய எண்.9/43A, புதிய எண்.9/5, ஒண்டிப்புதூர் ரோடு, NGR புரம், இருகூர் அஞ்சல், கோயமுத்தூர் – 641 103; **உரிமையாளரின் சட்டபூர்வ வாரிசுதாரர்கள்/ உத்தரவாதமளித்தவர்கள் : திரு. P. சிவகுமார்,** பழைய எண்.9/43A, புதிய எண்.9/5, ஒண்டிப்புதூர் ரோடு, NGR புரம், இருகூர் அஞ்சல், கோயமுத்தூர் – 641 103; **செல்வி. P. கிருஷ்ணவேணி,** பழைய எண்.9/43A, புதிய எண்.9/5, ஒண்டிப்புதூர் ரோடு, NGR புரம், இருகூர் அஞ்சல், கோயமுத்தூர் – 641 103; **திரு. கதிர்வேல்,** பழைய எண்.9/43A, புதிய எண்.9/5, ஒண்டிப்புதூர் ரோடு, NGR புரம், இருகூர் அஞ்சல், கோயமுத்தூர் – 641 103; **திரு. A.P. காளிமுத்து,** பழைய எண்.9/43A, புதிய எண்.9/5, ஒண்டிப்புதூர் ரோடு, NGR புரம், இருகூர் அஞ்சல், கோயமுத்தூர் – 641 103; **செல்வி. P. நீலவேணி,** பழைய எண்.9/43A, புதிய எண்.9/5, ஒண்டிப்புதூர் ரோடு, NGR புரம், இருகூர் அஞ்சல், கோயமுத்தூர் – 641103.
நிலுவைத் தொகை : **ரூ.39,26,418.48 (ரூபாய் முப்பத்து ஒன்பது லட்சத்து இருபத்து ஆறாயிரத்து நானூற்றுப் பதினெட்டு மற்றும் பைசா நாற்பத்து எட்டு மட்டும்)** 05.07.2022 தேதி வரை, மற்றும் வட்டி மற்றும் பிற செலவுகள்.

சொத்து விபரம் : திரு. A.பேச்சியண்ணன் பெயரிலுள்ள சொத்து : இனம்–1 : கோயமுத்தூர் பதிவு மாவட்டம், சிங்காநல்லூர் சார் பதிவு மாவட்டம், சூலூர் தாலூகா, இருகூர் கிராமம், சர்வே எண்.350/1, இதிலுள்ள 4.85 ஏக்கர், இதில் எல்லைகள் விபரம் : கருப்பண்ணனுக்குச் சொந்தமான சொத்துக்கு வடக்கு, அங்கமுத்துவுக்குச் சொந்தமான சொத்துக்குத் தெற்கு, அய்யாசாமி செட்டியாருக்குச் சொந்தமான காலி நிலத்துக்குக் கிழக்கு, தென்வடல் வண்டித் தடத்துக்கு மேற்கு. அளவுகளாக, தென்வடல் இருபுறமும் – 25 அடி; கிழமேல் இருபுறமும் – 43 அடி, எனச் சேர்ந்த மொத்தம் 1075 சதுரடி. மேலும், தென்வடல் இருபுறமும் – 20 அடி, கிழமேல் தென்புறம் – 78 அடி, கிழமேல் வடபுறம் – 82 அடி, எனச் சேர்ந்த மொத்தம் 1600 சதுரடி. மொத்தம் 2675 சதுரடி நிலம், அங்குள்ள கதவு எண்.9/2 வீட்டுடன், மின்னிணைப்பு எண்.405 ல் பாதி பங்கு, அனைத்து வழித்தட உரிமைகள் மற்றும் அங்குள்ள பிற பாத்திய அனுபந்தங்களுடன். **இனம்–2 :** கோயமுத்தூர் பதிவு மாவட்டம், சிங்காநல்லூர் சார் பதிவு மாவட்டம், சூலூர் தாலூகா, இருகூர் கிராமம், சர்வே எண்.350/1, இதிலுள்ள 4.85 ஏக்கர், இதில் 741 சதுரடிக்கு எல்லைகள் மற்றும் அளவுகளின் விபரம் : பேச்சியண்ணனுக்குச் சொந்தமான வீட்டுச் சொத்தின் முன் வாசலுக்கு வடக்கு, அங்கமுத்துவுக்குச் சொந்தமான சொத்துக்குத் தெற்கு, பேச்சியண்ணனுக்குச் சொந்தமான வீட்டுச் சொத்தின் முன் வாசலுக்குக் கிழக்கு, 12 அடி அகல தென்வடல் ரோட்டுக்கு மேற்கு. இதில், அளவுகளாக, கிழமேல் இருபுறமும் – 78 அடி; தென்வடல் இருபுறமும்– 9½ அடி, என 741 சதுரடி நிலம், அங்குள்ள வீட்டுடன், அனைத்து வழித்தட உரிமைகள் மற்றும் அங்குள்ள பிற பாத்திய அனுபந்தங்களுடன். ஆக சொத்தின் மொத்த பரப்பாக 3416 சதுரடி நிலம் மற்றும் அங்கு கட்டப்பட்டுள்ள கட்டிடம். இச்சொத்து இருகூர் கிராமப் பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ளது.
குறைந்தபட்ச விலை : ரூ.66,49,000/– முன்வைப்புத் தொகை : ரூ.6,65,000/– குறைந்தபட்ச ஏல உயர்வு : ரூ.50,000/–
வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க (ஏதேனுமிருப்பின்) விபரம் : இல்லை. எவ்வாறாயிருப்பினும் ஏலதாரர்கள் தங்களது சொந்த விசாரணையை மேற்கொண்டு பதிவு அலுவலகத்திலிருந்து வில்லங்கச் சான்றுகளைப் பார்வையிட்டுக்கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள்.
கணக்கு எண்.109321980050000, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, யூனியன் பேங்க் ஆப் இந்தியா, சிங்காநல்லூர் கிளை, IFSC கோடு : UBIN0910937
கணக்குப் பெயர் : Inward RTGS
தொடர்பு கொள்ள வேண்டியவரின் பெயர் மற்றும் தொடர்பு எண். : திரு. ரமேஷ்.B, கிளை மேலாளர், தொடர்பு எண்.7708746735, 8344734541.
சுவாதீன வகை : அடையாள சுவாதீனம்.

3. கிளை : சோமனூர். M/s. P K S டெக்ஸ்டைல்ஸ் (கடன்தாரர்), பிரதிநிதியாக அதன் உரிமையாளர் : திரு. M.கருப்புசாமி, எண்.2E-3, மேற்கு வீதி, பரமசிவம்பாளையம், பள்ளபாளையம் அஞ்சல், மங்கலம் – 641 663; **M/s. ஸ்ரீ செந்தூர் முருகன் டெக்ஸ் (கடன்தாரர்),** பிரதிநிதியாக அதன் உரிமையாளர் : திரு. K.சசிகுமார், எண்.6/2E-4, மேற்கு வீதி, பரமசிவம்பாளையம், பள்ளபாளையம் அஞ்சல், மங்கலம் – 641 663; **திரு. K.சசிகுமார் (சார் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர்),** எண்.2E-3, மேற்கு வீதி, பரமசிவம்பாளையம், பள்ளபாளையம் அஞ்சல், மங்கலம் – 641 663; **திரு. M.கருப்புசாமி (சார் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர்),** எண்.2E-3, மேற்கு வீதி, பரமசிவம்பாளையம், பள்ளபாளையம் அஞ்சல், மங்கலம் – 641 663.
நிலுவைத் தொகை : **ரூ.66,26,450.80 (ரூபாய் அறுபத்து ஆறு லட்சத்து இருபத்து ஆறாயிரத்து நானூற்று ஐம்பது மற்றும் பைசா எண்பது மட்டும்)** 31.12.2022 தேதி வரை, மற்றும் 01.01.2023 தேதியிலிருந்து வட்டி மற்றும் பிற செலவுகள். **(ரூ.49,13,685.60 தொகை P K S டெக்ஸ்டைல்ஸ் கணக்கிற்கும் மற்றும் ரூ.17,12,765.20 தொகை ஸ்ரீ செந்தூர் முருகன் டெக்ஸ் கணக்கிற்கும்).**

சொத்து விபரம் : திருப்பூர் பதிவு மாவட்டம், சூலூர் சார் பதிவு மாவட்டம், பல்லடம் தாலூகா, சாமளாபுரம் கிராமம், பொது சர்வே எண்.502/4 ல் உள்ள 1.29 ஏக்கர் புன்செய், இதில் வடபுறக் கோடியிலுள்ள குறிப்பிட்ட புன்செய் பரப்பு 0.255 ஏக்கர் (11118 சதுரடி). எல்லைகள் விபரம் : தெற்கே மற்றும் மேற்கே – திரு. ஈஸ்வரமூர்த்தி கவுண்டரின் மீதமுள்ள நிலம், வடக்கே – திரு. சின்னப்ப கவுண்டர் வகையறாவின் நிலம், கிழக்கே – திரு. ராமசாமியின் மனைவி திருமதி. பழனியம்மாளின் கட்டிடம். இதன் மத்தியில் உள்ள 0.255 ஏக்கர் அல்லது 11118 சதுர அடி காலி மனை, அங்குள்ள கட்டிடத்துடன் மற்றும் 22 அடி அகல வண்டித்தடத்தில் வழிநடை, வண்டித்தட உரிமைகளுடன். சாமளாபுரம் பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ள மேற்படி சொத்து, முருகசாமி மகன் திரு. M.கருப்புசாமியின் பெயரில் உள்ளது.
குறைந்தபட்ச விலை : ரூ.52,13,000/– முன்வைப்புத் தொகை : ரூ.5,25,000/– குறைந்தபட்ச ஏல உயர்வு : ரூ.50,000/–
வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க (ஏதேனுமிருப்பின்) விபரம் : இல்லை. எவ்வாறாயிருப்பினும் ஏலதாரர்கள் தங்களது சொந்த விசாரணையை மேற்கொண்டு பதிவு அலுவலகத்திலிருந்து வில்லங்கச் சான்றுகளைப் பார்வையிட்டுக்கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள்.
கணக்கு எண்.334901020050003, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, யூனியன் பேங்க் ஆப் இந்தியா, சோமனூர் கிளை, IFSC கோடு : UBIN0533491
கணக்குப் பெயர் : E Auction SARFAESIA
தொடர்பு கொள்ள வேண்டியவரின் பெயர் மற்றும் தொடர்பு எண். : திரு. B.S. பழனி, கிளை மேலாளர், தொடர்பு எண்.9840731959.
சுவாதீன வகை : அடையாள சுவாதீனம்.

முன்வைப்புத் தொகை (EMD) சமர்ப்பிக்க கடைசித் தேதி : ஏலத் தேதி அன்று, அல்லது மின்னணு ஏலம் தொடங்கும் முன்பாக
ஏலத் தேதி / நேரம் : 23.02.2023 (வியாழக்கிழமை); காலை 11.00 மணி முதல் மாலை 5.00 வரை, 10 நிமிட தன்னிச்சையான அளவற்ற நீட்டிப்புடன்.

குறிப்பு : 10 சதவீத முன்வைப்புத் தொகையை www.mstcecommerce.com இணையதளம் மூலமாக செலுத்த வேண்டும். மேலும், விற்பனை விலையின் மீதித் தொகையை விற்பனை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு எண் வழியாக செலுத்த வேண்டும்.
விற்பனையின் விரிவான நிபந்தனை விபரங்களுக்கு கீழே கண்டுள்ள சம்பந்தப்பட்ட கணக்கிற்கான வங்கியின் இணையதளத்தில் அல்லது இ–ஏலத்தின் முகவரின் இணையதளத்தில் கண்டுள்ள லிங்க்–கில் தொடர்பு கொள்ளவும்.
சொத்து விபரங்கள் (மின்னணு ஏல விற்பனை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட பரப்பு மற்றும் அளவுகள் போன்றவை) கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி நன்கு அறிந்தவரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஏதேனும் பிழை, தவறான தகவல் மற்றும் விடுபடுதலுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பொறுப்பேற்க மாட்டார். அடையாள சுவாதீனப் பரப்பு மற்றும் அளவுகள் மாறுபடலாம்.

www.unionbankofindia.co.in | www.mstcecommerce.com | https://www.ibapi.in

URL சொத்து விவரங்களை தெரிந்து கொள்ள வலைதளம் **https://www.ibapi.in/sale_info_home.aspx** மற்றும் வலைதளம் **https://www.unionbankofindia.co.in/english/TendelViewAllAuction.aspx - ல் உட்புகவும்.** ஏலதாரர் பதிவு, லாகின் செய்ய மற்றும் ஏல விதிகளை தெரிந்து கொள்ள கீழ் குறிப்பிட்ட வலைதளத்துக்கு வருகை தரவும் **https://www.mstcecommerce.com/auctionhome/ibapi/index.jsp** மற்றும் **"Buyer Guide for Login and Registration"** –ஐ கிளிக் செய்யவும்.

இடம் : கோயமுத்தூர்
தேதி : 12–01–2023 & 18–01–2023

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
யூனியன் பேங்க் ஆப் இந்தியா

குஜராத் கலவர பிபிசி ஆவணப் படத்துக்கு மத்திய அரசு தடை

புது தில்லி, ஜன. 21: குஜராத்தில் 2002-ஆம் ஆண்டு நிகழ்ந்த கலவரம் தொடர்பான பிபிசி நிறுவனத்தின் ஆவணப் படத்தை இந்தியாவில் தடை செய்யுமாறு யூடியூப், ட்விட்டர் சமூக வலைதளங்களுக்கு மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

குஜராத்தில் ஹிந்து-முஸ்லிம் சமூகத்தினர் இடையே 2002-ஆம் ஆண்டு நிகழ்ந்த மோதல் குறித்து 'இந்தியா: தி மோடி க்வஷின்' என்ற ஆவணப்படத்தை பிபிசி உருவாக்கியது. இரண்டு பாகங்களைக் கொண்ட அந்த ஆவணப்படத்தின் முதல் பாகம் அண்மையில் வெளியானது. குஜராத் கலவரத்தில் அப்போதைய முதல்வராக இருந்த நரேந்திர மோடிக்கு நேரடித் தொடர்பிருப்பதாக அதில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இது சர்வதேச அளவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஆவணப்படத்தின் இரண்டாவது பாகம் அடுத்த வாரம் வெளியாகவுள்ளது. அந்த ஆவணப்படம் வெற்றுப் பிரசாரம் என வெளியுறவு அமைச்சகம் கண்டனம் தெரிவித்திருந்தது. அதே வேளையில், விரிவான ஆய்வுக்குப் பிறகே ஆவணப்படம் உருவாக்கப்பட்டதாக பிபிசி தரப்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குஜராத் கலவரம் தொடர்பான ஆவணப்படத்தை இந்தியாவில் தடை செய்யுமாறு யூடியூப், ட்விட்டர் சமூக வலைதளங்களை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

அந்த ஆவணப்படம் தொடர்பான இணைய முகவரிகளை (லிங்க்) நீக்குமாறும் அந்நிறுவனங்களுக்கு மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

மத்திய தகவல் ஒலிபரப்புத் துறைச் செயலர் அபூர்வா சந்திரா, தகவல் தொழில்நுட்ப விதிகளின் (2021) கீழ் இந்த வலியுறுத்தலை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக மத்திய அரசு அதிகாரிகள் கூறுகையில், "குஜராத் கலவரம் தொடர்பான ஆவணப்படத்தை வெளியுறவு, உள்துறை, தகவல் ஒலிபரப்பு உள்ளிட்ட பல்வேறு அமைச்சகங்கள் ஆய்வு செய்தன. அதில் இடம்பெற்றுள்ள கருத்துகள், உச்சநீதிமன்றத்தின் நம்பகத்தன்மைக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் இந்தியாவில் பல்வேறு சமூகத்தினரிடையே பிரிவினையை ஏற்படுத்தும் வகையிலும் உள்ளன.

இந்தியாவின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைக்கும் வகையில் இந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. நட்பு நாடுகளுடனான இந்தியாவின் நல்லுறவை சீர்குலைக்கவும் இந்த ஆவணப்படம் முயற்சிக்கிறது. அதன் காரணமாக, ட்விட்டரில் இடம்பெற்றிருந்த ஆவணப்படத்துக்கான 50 யூடியூப் இணைய முகவரிகளை நீக்க அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டது. அதை ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட இணைய முகவரிகளை சமூக வலைதள நிறுவனங்கள் நீக்கியுள்ளன" என்றனர்.

பிரித்தாளும் சூழ்ச்சி

பிபிசியின் ஆவணப்படத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஓய்வுபெற்ற நீதிபதிகள், அதிகாரிகள் உள்ளிட்ட 302 பேர் இணைந்து சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், ''குஜராத் கலவரத்தை நடுநிலைத்தன்மையுடன் இந்த ஆவணப்படம் விமர்சிக்கவில்லை. மாறாக, திட்டமிட்ட பொய்யுரைகள் மட்டுமே ஆவணப்படத்தில் இடம்பெற்றுள்ளன. பிரிட்டன் காலனியாதிக்கத்தின் பிரித்தாளும் சூழ்ச்சி மனப்பான்மையே அதில் காணப்படுகிறது.

இந்தியாவின் 75 ஆண்டுகால சுதந்திரத்தையும் நாட்டு மக்களின் விருப்பத்தையுமே இந்த ஆவணப்படம் கேள்விக்கு உள்ளாக்குகிறது. நாட்டின் பிரதமர் மீது ஒருதலைபட்சமாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை ஒருபோதும் ஏற்க முடியாது. குஜராத் கலவரத்தில் பிரதமர் நரேந்திர மோடிக்குத் தொடர்பில்லை என உச்சநீதிமன்றம் விரிவான விசாரணைக்குப் பிறகு தெரிவித்துள்ளது. பொய்யான தகவல் அடிப்படையில் ஆவணப்படத்தை பிபிசி தயாரித்துள்ளது'' என்று குறிப்பிட்டுள்ளனர்.

எகிப்து அதிபரின் இந்தியப் பயணம் நல்லுறவை வலுப்படுத்தும்

வெளியுறவு அமைச்சகம்

புது தில்லி, ஜன. 21: எகிப்து அதிபர் அப்தெல் ஃபத்தா அல்-சிசியின் இந்தியப் பயணம் இருதரப்பு நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குடியரசு தினம் வரும் 26-ஆம் தேதி கொண்டாடப்படவுள்ளது. தில்லியில் நடைபெறவுள்ள குடியரசு தின நிகழ்ச்சியில் எகிப்து அதிபர் அப்தெல் ஃபத்தா அல்-சிசி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். அதற்காக செவ்வாய்க்கிழமை (ஜன. 24) இந்தியாவுக்கு வருகை தரும் எகிப்து அதிபர், 3 நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார். இந்தியக் குடியரசு தின விழாவின் சிறப்பு விருந்தினராக எகிப்து அதிபர் கலந்து கொள்வது இதுவே முதல் முறையாகும். இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், "இந்தியாவுக்கு வருகை தரும் எகிப்து அதிபர் அல்-சிசிக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் 25-ஆம் தேதி அரசு சார்பில் வரவேற்பு அளிக்கப்படவுள்ளது. அதில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு கலந்து கொள்ளவுள்ளார்.

அன்றைய தினமே பிரதமர் நரேந்திர மோடி-எகிப்து அதிபர் அல்-சிசி இடையேயான பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. அப்போது வேளாண்மை, இணையவெளி, தகவல் தொழில்நுட்பம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பான ஒப்பந்தங்கள் கையொப்பமாகவுள்ளன. எகிப்து அமைச்சர்களைக் கொண்ட குழுவும் பேச்சுவார்த்தையில் பங்கேற்கவுள்ளது. இருதரப்பு, பிராந்திய, சர்வதேச விவகாரங்கள் தொடர்பாக இருநாட்டுத் தலைவர்களும் பேச்சுவார்த்தையின்போது விவாதிக்கவுள்ளனர். வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரும் எகிப்து அதிபரைச் சந்தித்துப் பேசவுள்ளார். எகிப்து அதிபரின் இந்தியப் பயணம் இருதரப்பு நல்லுறவை மேலும் வலுப்படுத்தும்.

இந்தியக் குடியரசு தின அணிவகுப்பில் எகிப்து ராணுவப் படையின் குழுவும் பங்கேற்கவுள்ளது. ஆப்பிரிக்க, அரபு நாடுகளின் அரசியலில் முக்கியப் பங்கு வகித்து வரும் எகிப்துடன் நல்லுறவை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது.

பன்னாட்டு, சர்வதேச அமைப்புகளில் இந்தியாவும் எகிப்தும் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகின்றன.

பரஸ்பர கலாசாரப் பகிர்வுகள், பொருளாதார வளர்ச்சிக்கான முக்கியத்துவம், பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பு, பிராந்திய, சர்வதேச விவகாரங்களில் ஒத்துழைப்பு உள்ளிட்டவை இந்தியாவுக்கும் எகிப்துக்கும் இடையேயான நல்லுறவைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருகின்றன.

உச்சத்தில் வர்த்தகம்: கடந்த சில ஆண்டுகளில் இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகமும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த 2021-22-ஆம் நிதியாண்டில் இருதரப்பு வர்த்தகம் சுமார் ரூ.58,000 கோடி என்ற வரலாற்று உச்சத்தைத் தொட்டது. எகிப்துக்கான இந்தியப் பொருள்களின் ஏற்றுமதி சுமார் ரூ.30,000 கோடியாகவும் அந்நாட்டுப் பொருள்களின் இறக்குமதி சுமார் ரூ.28,000 கோடியாகவும் உள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த 50-க்கும் அதிகமான நிறுவனங்கள் சுமார் ரூ.25,000 கோடியை எகிப்தில் முதலீடு செய்துள்ளன. முக்கியமாக, ரசாயனங்கள், எரிசக்தி, ஜவுளி, வேளாண்மை, சில்லறை வணிகம் உள்ளிட்ட துறைகளில் இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

OMKARA
ASSETS RECONSTRUCTION Pvt. Ltd.
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிமிடெட்
CIN: [illegible]
பதிவு அலுவலகம்: [illegible] திருப்பூர் - 641 [illegible]. தொலைபேசி: 0421 2221144
[illegible]: C/515, [illegible], L.B.S. சாலை [illegible], மும்பை - 400070. தொலைபேசி: 022-26544000.

[இணைப்பு-IV-A] [பார்க்க விதி 8(6)] அசையாச் சொத்துக்களின் E-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("SARFAESI சட்டம்") அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான E-ஏல அறிவிப்பு

[illegible] 31.05.2014 [illegible]. மேலும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிமிடெட் (OARPL) (ஓம்காரா PS 01/2016-17 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டியாகச் செயல்படும் முறையில்) நிறுவனமானது கீழ்க்காணும் கணக்குகள் தொடர்பான அனைத்து நிலுவைத் தொகைகளையும் 31.03.2017 நாளிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின்படி ஆந்திரா வங்கியிடமிருந்து (தற்பொழுது யூனியன் பாங்கு ஆஃப் இந்தியா வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளது) (ஒப்படைப்பாளர்) தொடர்புடைய கடனீட்டுச் சொத்துக்களுடன் சேர்த்துத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. [illegible]

தொகுப்பு எண்	கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) பெயர்	கடனீட்டுச் சொத்தின் விவரம்	சொத்தின் உரிமையாளர்	கோரிக்கை அறிவிப்பு நாளும் கோரப்பட்ட தொகையும்	ஏல உயர்வுத் தொகை	குறைந்தபட்ச விலை	டேவணித் தொகை (EMD)	சொத்து ஆய்வு நாள் மற்றும் நேரம்
தொகுப்பு 1	1. குணா கேபினட்ஸ் (கடன்தாரர்), 2. திரு. S ரமேஷ் (கடன்தாரர் / ஜாமீன்தாரர்), 3. திருமதி உஷா ராணி (கடன்தாரர் / ஜாமீன்தாரர்), 4. திருமதி R யசோதா (சுய ஜாமீன்), 5. திரு. R கந்தசாமி (தனிப்பட்ட ஜாமீன்தாரர்), 6. திருமதி S சந்திரா (சுய ஜாமீன்), 7. திரு. V குணசேகரன் (சுய ஜாமீன்)	[illegible] எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு: [illegible], மேற்கு: [illegible], வடக்கு: [illegible], தெற்கு: [illegible]. [illegible]	திரு. V குணசேகரன்	13.02.2014 – தொகை: 07.02.2014 [illegible]	ரூ.1,00,000/-	[illegible]	[illegible]	ஆய்வு நாள்: 25.01.2023 நேரம்: [illegible] 11 மணி [illegible] 12 மணி வரை
தொகுப்பு 2		[illegible] 1.110 [illegible] 4451.54 [illegible] SF [illegible] 230 & 234/1B, [illegible] எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு: [illegible], மேற்கு: [illegible], வடக்கு: [illegible], தெற்கு: [illegible]. [illegible]				ரூ.77,00,000/-	ரூ.7,70,000/-	

கணக்கு எண்: [illegible], பயனாளர் பெயர்: [illegible], கிளை: [illegible] (Special Commercial Branch), [illegible], IFSC [illegible]
E-ஏல நாள் மற்றும் நேரம்: 08.02.2023 [illegible]
[illegible] 07.02.2023 [illegible]

ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:
[illegible] http://omkaraarc.com/auction.php [illegible].
[illegible] மூலம் அசலாக அல்லது NEFT / RTGS மூலம் பணப் பரிமாற்ற முறையில்] [illegible] 07.02.2023 [illegible] பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் உருவாக்குதல், தரவுகளைப் பதிவேற்றம் செய்தல், ஏலப்புள்ளி தாக்கல் செய்தல் போன்றவற்றில் உதவி தேவைப்பட்டாலோ e-ஏலக்கோரல் நடைமுறையில் கலந்து கொள்ளப் பயிற்சி தேவைப்பட்டாலோ தொடர்பு கொள்ள வேண்டிய e-ஏலச் சேவை வழங்குநர்: "M/s.C1 இந்தியா பிரைவேட் லிட்.", உதவித் தொலைபேசி எண்: +91-7291981124 / 25 / 26, உதவி மின்னஞ்சல் முகவரி: support@bankeauctions.com, திரு.ஹரீஷ் கௌடா - கைப்பேசி: 95945 97555, மின்னஞ்சல்: hareesh.gowda@c1india.com. சொத்து தொடர்பான கேள்விகளுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரப்பூர்வ அலுவலர்: திரு.ஷுபோதீப் பானர்ஜி - கைப்பேசி: +91 7558392736, மின்னஞ்சல்: s.banerjee@omkaraarc.com.
கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழான சட்டப்படியான விற்பனை அறிவிப்பு
[illegible]

ஒம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர், ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட்.
(ஓம்காரா PS 01/2016-17 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டி எனும் முறையில்)
நாள்: 22.01.2023
இடம்: மும்பை